# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 01/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமி | நாள் | 23.08.2023 |
| கணவர் பெயர் | மாணிக்கம் | | |

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

15) தாவா சொத்தை நான் கிரயம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்திற்குரிய மூலப்பத்திரத்தை பரிசீலனை செய்தேனா என்றால், என் கணவருக்கு தான் அது குறித்து தெரியும். நான் பரிசீலித்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி மூலப்பத்திரம் யார் யார் பெயரில் உள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

16) மேற்படி தாவா சொத்திற்குரிய கிரய பத்திரம் எதன் அடிப்படையில் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. எனக்கு மேற்படி கிரயப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டது குறித்து அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும், இந்த தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்பது குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக அவை குறித்து எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

17) தாவா சொத்தை நான் கிரயம் பெற்ற காலகட்டத்தில் என் கணவர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தார் என்றால், சரிதான். ஆனால் அவர் வேறு ஊரில் பணியாற்றினார்.

18) தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் ஆரம்ப காலத்தில் ஒரு பெருமாள் கவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

19) மேற்படி பெருமாள் கவுண்டரின் பூர்வீக சொத்துக்களை இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி காவேரி உட்பட அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி அவர்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் 17.09.1976 ம் தேதியில்

மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1614 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

20) அவ்வாறு ஏற்பட்ட பாகபிரிவினையின் படி 1ம் பிரதிவாதி காவேரிக்கு "E" செட்யூல் சொத்தாக தாவா சொத்தும், இதர சொத்துக்களும் பாத்தியப்பட்டுள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்துக்களை காவேரியிடமிருந்து கிரயம் பெற்றிருந்தேன் என்றால், மேற்படி தகவல்கள் அனைத்தும் என் கணவருக்குதான் தெரியும். எனக்கு ஞாபகமில்லை.

21) மொத்தம் நான் எத்தனை சென்ட் நிலத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால், 41 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்ற சொத்து இரண்டு தாக்குகளாக உள்ளது என்றால், சரிதான். மேற்படி 32 சென்ட் நிலத்திற்கு செக்குபந்தி விவரங்கள் என்னால் கூற இயலுமா என்றால், மேற்படி நிலத்திற்கு தென்புறம் தங்கராஜின் நிலம் உள்ளது. கிழக்கு புறம் புறம்போக்கு நிலம் உள்ளது. மீதமுள்ள இரண்டு பக்கங்கள் எனக்கு சரியாக நினைவில்லை.

22) மேற்படி 9 சென்ட் நிலத்தை பொறுத்தவரை அதன் வடபுறம் மாரிமுத்துவின் நிலம் உள்ளது. கிழக்குபுறம் அங்கா என்பவரது நிலம் உள்ளது. மேற்குபுறம் உள்ள நிலத்தை சேலத்திலிருந்து ஒருவர் குத்தகைக்கு ஓட்டி வருகிறார். தெற்குபுறம் ஓடை உள்ளது. நான் சொல்வது போல் அவ்வாறு உண்மையில் செக்குபந்தி விவரங்களே கிடையாது என்றாலும், அவை தவறானவை என்றாலும், சரியல்ல.

23) தாவா சொத்தை எப்போது கிரயம் பெற்றேன் என்றால், தேதி, மாதம், வருடம் எனக்கு நினைவில்லை. தாவா சொத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

24) 1994ம் வருடம் 1ம் பிரதிவாதி காவேரி மற்றும் இதர பிரதிவாதிகள் தாவா சொத்தை என்னிடம் அடைமானம் வைத்ததாக சொல்லும் நிலையில் மேற்படி அடைமானம் குறித்து ஆவணம் எதையேனும் ஏற்படுத்தினோமா என்றாலும், மேற்படி ஆவணத்தை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. அடைமானபத்திரத்தில் யார் யார் கையொப்பம் இட்டுள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

25) தாவா சொத்தின் பேரில் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும், அவர்களது சகோதரர் நடராஜ் என்பவருக்கும் கூட்டுப்பாக உரிமை உள்ள நிலையில் மேற்படி நபர்களின் அனுமதியில்லாமல் நான் அடைமானம் ஏற்படுத்தியுள்ளேனா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

26) தாவா சொத்திற்குரிய வரி ரசீதுகள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வது பொய்யானது என்றாலும், இதுவரை நான் தாவா சொத்திற்கு எவ்வித வரியையும் செலுத்தவில்லை என்றாலும், அவ்வாறு செலுத்தியிருந்தால் நீதிமன்றத்தில் அவற்றை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், சரியல்ல.

27) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.247/2012 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கான வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி ஆவணம் எதற்காக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், 1ம் பிரதிவாதி எனக்கு கிரயம் கொடுத்த சொத்தை நான் அனுபவிக்க கூடாது என நடராஜ், மாரியம்மாள் மற்றும் கிருஷ்ணவேனி தடுத்ததால் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

28) மேற்படி வழக்கில் நான் தரப்பினரா என்றால், ஆம். மேற்படி வழக்கை எந்த வழக்கறிஞரை வைத்து தாக்கல் செய்தேன் என்றால், சரியாக ஞாபகமில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 பதிலுரை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுவும் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்கள் குறித்து எனக்கு ஏதேனும் விவரங்கள்

தெரியுமா என்றால், ஞாபகமில்லை. எனக்கு எல்லா விவரங்களும் தெரியும் என்றாலும், நான் குறுக்கு விசாரணையில் பதில் அளிப்பதை தவிர்க்கவே எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், என் கணவருக்கு தான் தெரியும் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

29) தாவா சொத்தானது 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு பங்குரிமை உள்ள கூட்டுக்குடும்ப சொத்து என்பதால், அதை 1ம் பிரதிவாதி மட்டும் தனிப்பட்ட முறையில் விற்க அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், தாவா சொத்தில் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும், அவர்களது இறந்துபோன சகோதரர் நடராஜிற்கும், அவரது மனைவியும், மகளுமான 6, 7 பிரதிவாதிகளுக்கும் உள்ள பாக உரிமையை மறைத்து நான் 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை மோசடியாக கிரயம் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல.

30) 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை எழுதி கொடுக்க பூரண உரிமை இல்லாததால் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.